# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் ௧௪ திருவள்ளுவர் ஆண்டு ௨௦௩௫ தை -௨௧ ௦௪-௦௨-௨௦௦௪ புதன்கிழமை ஓசை-௩௫௧







## வடக்கு-கிழக்கு மக்களின்

# மனிதாபிமானப் பிரச்சினையைத் தீர்க்க அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்

### சுவிஸ் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளிடம் அரசியல்துறைப் பொறுப்பாளர் வலியுறுத்து

**வடக்கு-கிழக்கு மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையைத் தற்காலிகமாகவேனும் தீர்த்துவைப்பதில் அர்த்தமுள்ள ஈடுபாட்டை சர்வதேச சமூகம் மேற்கொள்ளவேண்டும் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் சுவிஸ் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடனான சந்திப்பில் கேட்டுக்கொண்டுள்ளார்.**

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்று சுவிஸ்லாந்து வெளிவிவகார அமைச்சு உயரதிகாரிகளை சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பின் போது இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் தொடர்பாக முக்கியமாகக் கலந்துரையாடப்பட்டது.

வெளிவிவகாரத் திணைக்களத்தின் அரசியல் தலைமை நிர்வாகியும் தூதுவருமான பிளேசி கொடெற், வெளிவிவகார அமைச்சின் அரசியல் விவகார மனித உரிமைகளுக்கான பாதுகாப்பு உத்தியோகத்தரான பீற்றர் மூரர் ஆகியோரை வெளிவிவகார அமைச்சில் அவர்கள் சந்தித்தனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## கிருஷாந்தி படுகொலைச் சம்பவம் 5 படையினருக்கும் மரணதண்டனை

### உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தியது

கிருஷாந்தி குமாரசாமி படுகொலை வழக்கில் பிரதிவாதிகள் ஐந்து பேர் மீதான மரணதண்டனையை உயர்நீதிமன்றம் மீண்டும் நேற்று உறுதிப்படுத்தியுள்ளது.

ஏற்கனவே கொழும்பு மேல்நீதிமன்றம்இராணுவவீரர்களான இவர்களைக் குற்றவாளிகளாக இனங்கண்டு அவர்களுக்கு மரணதண்டனை விதித்தமை தெரிந்ததே. எனினும் இத்தண்டனை விதிக்கப்பட்டமுறை பிழையானதென சுட்டிக்காட்டி பிரதிவாதிகள் ஐவரும் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர். இதனை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர் நீதிமன்றம் குறிப்பிட்ட ஐவரும் தமது வாதம் தொடர்பாக உரிய சாட்சியங்களைத் தமக்கு சமர்ப்பிக்கவில்லையென தெரிவித்து அதனடிப்படையில் அவர்களுக்கு மேல்நீதிமன்றம் விதித்த மரணதண்டனையை உறுதிப்படுத்தியுள்ளது.

1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வீதிநாடகத்தை குழப்ப முற்பட்ட கடற்படையினர்-மக்கள் முறுகல்

### வேலணையில் சம்பவம்

வேலணை மத்திய கல்லூரியில் இடம்பெற்ற வீதிநாடகத்தை பார்வையிடச் சென்றோர் மீது கடற்படையினர் பெரும் அடாவடித்தனத்தை புரிந்துள்ளதுடன் நாடகத்தின் ஏற்பாட்டாளர்களுடனும் முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளனர்.

நேற்றைய தினம் நடைபெற்ற இச்சம்பவம்பற்றித் தெரியவருவதாவது, தமிழ்த்தாய் கலை மன்றத்தினரால் "இரத்த வாடையில் கலந்த தென்றல்" என்ற வீதி நாடகம் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்பட்டு வருகிறது. இந்நாடகம் நேற்றைய தினம் மேற்படி பாடசாலையில் இடம்பெற்றுக் கொண்டிருந்த

(8ஆம் பக்கம் பார்க்க)

### ஆயுத தளபாடங்கள் காட்சிக்கு

சிறிலங்கா சுதந்திரதினத்தைக் கொண்டாடும் முகமாக கொழும்பில் ஆயுத தள பாடங்கள் சகிதம் இராணுவம் அணிவகுப்பு இன்று நடைபெறவுள்ளது.

இதில் ஆட்லறிகள், டாங்கிகள், பலகுழல் எறிகணை செலுத்திகள் போன்றவை காட்சிக்கு விடப்படவுள்ளன. 56 வது சுதந்திரதினமான இன்று விசேட நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது..

## உழவுஇயந்திரத்தில் நசியுண்டு கொழும்புத்துறையில் சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்றுகொண்டிருந்த சிறுவனை எதிரில் வந்துகொண்டிருந்த உழவு இயந்திரம் மோதியதில் சிறுவன் அந்த இடத்திலேயே உடல் நசியுண்டு பலியாகியுள்ளார்.

நேற்றையதினம் யாழ்.கொழும்புத்துறைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பூ.ஜேம்ஸ் (வயது12) என்ற சிறுவனே பலியாகியுள்ளார்.

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, சம்பவ நேரம் வீதியால் சென்ற சிறுவனை எதிரில் வந்து கொண்டிருந்த உழவியந்திரம் ஒன்று மோதியதிலேயே மரணம் நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சம்பந்தப்பட்ட உழவியந்திரமும் சாரதியும் சம்பவ இடத்தைவிட்டு தலைமறைவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (33, 27)

# சிறிலங்காவின் சுதந்திரதினமான இன்று துக்கதினமாகக் கடைப்பிடிக்க ஏற்பாடு

பல்வேறு பொது அமைப்புக்களின் வேண்டுகோளிற்கிணங்க சிறிலங்காவின் சுதந்திரதினமான இன்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் துக்கதினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இலங்கை ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்றுவரை இலங்கைத் தமிழர்கள் சிங்களப் பேரினவாதிகளின் அடக்கு முறைக்குள்ளாக்கப்பட்டு சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையிலேயே உள்ளனர். இதனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இது துக்கதினமே. இத்தினத்தில் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டு கறுப்புப் பட்டிகளை அணியுமாறு வவுனியா மாவட்ட மாணவர் அமைப்பினரும் யாழ் மாவட்ட வெகுசன அமைப்பினரும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

சிறிலங்கா சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்றுவரை எமக்கு எதுவித உரிமைகளும் வழங்கப்படவில்லை. சிறிலங்காவின் அரசபடைகள் எமது தமிழ்ப் பெண்கள் மீது அடாவடித்தனங்களை மேற்கொண்டும் பல்லாயிரக்கணக்கான பெண்களை விதவைகளாக்கியும் பல்லாயிரக்கணக்கான பெண்கள் இன வன்முறைகளால் கொல்லப்பட்டும் உள்ளனர்.இது இவ்வாறு இருக்க இன்றைய சிறிலங்கா சுதந்திர தினத்தை தமிழ்ப் பெண்களாகிய நாம் தாயகம் தழுவிய ரீதியில் முற்றுமுழுதாக புறக்கணிப்போம் என துணுக்காய் வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அமைப்புக்களும் தமது கண்டனத்தில் தெரிவித்துள்ளன.

இதேவேளை மன்னார், கிளி

(8ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத் தேர்தல் திருத்தத்திற்கு ஆளும், எதிர்க்கட்சிகள் ஆதரவு

மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் அவசர சட்ட மூலமாக கருதி நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மூன்று திருத்தங்கள் அடங்கிய இச்சட்ட மூலத்திற்கு ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் பூரண ஆதரவு வழங்கியுள்ளன.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இச்சட்ட மூலத்தை சமர்ப்பித்து உரையாற்றினார். இவ்விவாதத்தில் நந்தன குணதிலக மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குண

(8ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய போராட்டத்தைக்குழப்ப யாழ். இல் படையினர் தீவிர முயற்சி

(வடமராட்சி)

சுதந்திரதினமான இன்று யாழ். குடாநாட்டில் முழு அளவிலான பகிஷ்கரிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்ற வேளை மேற்படி பகிஷ்கரிப்பு போராட்டத்தை குழப்பியடிக்கவும் தமது சுதந்திரதின நிகழ்வுகளை கொண்டாடவும் படைத்தரப்பு முழு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. நேற்றைய தினம் பருத்தித்துறை துறைமுகப்பகுதியில் அமைந்துள்ள 524 ஆவது படைத்தளத்திற்கு வடமராட்சி வடக்கின் கரையோர கிராமங்களைச் சேர்ந்த மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டு பேச்சுக்கள் நடாத்தப்பட்டிருந்தன. அங்கு கலந்து கொண்ட படை அதிகாரிகள் மீனவர்களை இப்பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கவேண்டாமென கோரியுள்ளனர்.

அத்துடன் கரையோரக் கிராமமக்களின் பொது இடங்களிலோ அல்லது படகுகளிலோ கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடவேண்டாமெனவும் அப்படையதிகாரிகள் தம்மிடம் கோரியதாக கூட்டத்தில் கலந்து கொண்ட மீனவ சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இதனிடையே பருத்தித்துறை, கடற்கரை வீதிப் பகுதியெங்கும் உள்ள

(8ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.பல்கலை நிர்வாகத்திற்கு எதிராக ம.உ. ஆணைக்குழுவில் ஊழியர் முறையீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். யாழ். பல்கலைக்கழகத்திற்கான புதிய ஊழியர்களை நியமிக்கும் விடயத்தில் கல்வி மற்றும் திறமை போன்ற தகைமைகளை கருத்தில் கொள்ளாது செல்வாக்கு மற்றும் சலுகைகள் அடிப்படையில் சில ஊழியர்களை முறைகேடான விதத்தில் பல்கலை நிர்வாகம் நியமித்துள்ளது.

இதனால் ஆற்றல் உள்ள பலர் புறக்கணிக்கப்பட்டுள்ளமையைக் கண்டித்து தமக்கு நியாயமான தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரியும், தகைமைகள் இருந்தும் பாதிக்கப்பட்டவர்கள் உரிமைகளைப் பாதுகாக்கக் கோரியும் இம்முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (33)

# தென்மராட்சி தெற்கு மக்களின் உண்ணாவிரதத்திற்கு யாழ்.வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் ஆதரவு

நாளை சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளவிருக்கும் தென்மராட்சி தெற்கு மக்களுக்கு யாழ்.மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் தமது முழு ஆதரவை வழங்கும் என ஒன்றிய பொதுச் செயலாளர் ப.கனகலிங்கம் தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்டு புலம் பெயர்ந்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அவல வாழ்வை அனுபவித்து வரும் தென்மராட்சி தெற்கு பிரிவுகளான மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, நாவற்குழிதெற்கு கிராமங்களை சேர்ந்த மக்கள் மீளக்குடியமர்வதற்கு படைத்தரப்பினர் மறுத்து வருகிறார்கள். இது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். அப்பகுதியில் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள படையினர் பல வழிகளிலும் முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர் என அப்பகுதிவாழ் மக்கள் தொடர்ந்து முறையிட்டு வருகின்றனர்.

ஆதனால் ஏமாற்றமும், விரக்தியுமடைந்த பொதுமக்கள் தமது எதிர்ப்புணர்வை காட்டி தங்களது கோரிக்கை நிறைவேறும் வரை சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனர். இதற்கு சகல வழிகளிலும் முழு ஆதரவு வழங்க யாழ். மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் முடிவு செய்துள்ளது. ஆதலால் அனைத்து பொது அமைப்புக்களுக்கும் மேற்படி போராட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டுமென ஒன்றியம் இவ் அறிக்கை மூலம் கேட்டுக் கொண்டுள்ளது.

## பேசாலை அகதி முகாமிலிருந்து 8 குடும்பங்கள் கிளி. திரும்பின

(அலுவலகசெய்தியாளர்)

மன்னார் பேசாலை அகதிகள் முகாமிலிருந்து 8 குடும்பங்கள் நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்துள்ளன.

மேற்படி பேசாலை அகதிகள் முகாமிலிருந்து கிளி. கரைச்சிப் பிரதேச செயலகத்திற்கு வருகை தந்த 8 குடும்பங்களைச் சேர்ந்த 34 உறுப பினர்களுக்கு கரைச்சிப்பிரதேச செயலர் பொன் நித்தியானந்தனின் பணிப்பின் பெயரில் இரண்டு நாட் களுக்கான சமைத்த உணவுகள் வழங்கப்பெற்றதுடன் மேற்படி குடும்பங்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற் கான நடவடிக்கையினை கரைச்சிப் பிரதேச செயலகத்தினரால் மேற்கொள்ளப்பெற்று இக்குடும்பங்களின் சொந்த இடங்களான இயக்கச்சி, முழங்காவில், பாரதிபுரம், மலையாளபுரம் ஆகிய கிராமங்களுக்கு இவர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர்.

மேற்படி குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி. ஆர் நிறுவனத்தினரால் உணவல்லாத பொருட்கள் வழங்கப்பெற்றமை குறிப பிடத்தக்கது. (சோ)

## மீனிற்கு போடும் ஐஸ்கட்டியை குளிர்பானத்திற்குப் பயன்படுத்தாதீர்

### - தமிழீழ சுகாதார சேவையினர் கோரிக்கை

முல்லைத்தீவில் மீன், இறால் என்பன ஏற்றுமதி செய்வதற்காக கொழும்பிலிருந்து தருவிக்கப்படும் ஐஸ்கட்டியை மக்கள் குளிர்பானங்களுடன் அருந்துகின்றனர்.

இதனால் பல நோய்கள் ஏற்படுவதாக உள்ளதாக தமிழீழ சுகாதார சேவையினர் கருதுகின்றனர்.

எனவே இவ் ஐஸ்சினை குளிர்பானப் பாவனைக்கு பயன்படுத்துவதை நிறுத்துமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)

## முன்பள்ளி திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

சேர். பொன். இராமநாதன் முன்பள்ளி திறப்புவிழா நாளை காலை 10 மணிக்கு கிளிநொச்சி 3ஆம் வாய்க்கால் இராமநாதன் கமத்தில் இடம்பெறவுள்ளது. பரமேஸ்வரா நம்பிக்கை நிதிய உபகுழுவினால் மேற்படி முன்பள்ளி அமைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

திருவையாறு முதலாம் பகுதி வீதியிலிருந்து பொ. மகாலிங்கம் என்பவரால் என். வீரப்பன் உதய நகர் வடக்கு என்ற முகவரியை உடைய அட்டை மற்றும் ரசீதுகள், குறிப்பிட்ட தொகைப் பணம் என்பன கண்டெடுக்கப்பட்டு கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர் அலுவலக நேரத்தில் சங்க தலைமைச செயலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளும் வண்ணம் சங்க பொது முகாமையாளர் வேண்டியுள்ளார். (சோ)


## புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

| | |
|---|---|
| சங்கீதம் | வயலின் |
| நடனம் | ஓவியம் |
| ஓகன் | கிற்றார் |
| மிருதங்கம் | நாடகம் |
| வீணை | |

பிரபலம் மிக்க கலைஞர்களால் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

காலம்:- 05.02.2004 (வியாழன்) காலை 9.00 மணிக்கு கலை ஆர்வலர்கள் அனைவரும் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

குறிப்பு:- ஏற்கனவே பயிலும் சகல பிரிவு மாணவர்களும் அன்றைய தினம் தவறாது சமுகம் தரவும்.

நிர்வாகம்,
அழகியல் கலாமன்றம்,
கிளிநொச்சி.

(4211)



## சிவா வர்த்தக நிலையம்

SIVA TRADING CO

எமது நிலையம் மீண்டும் பழைய முகவரியில்
இல.23, கண்டிவீதி,
கிளிநொச்சி.

பல்பொருள் வர்த்தகம்– ஆரம்பம்: – 5. 2. 2004 (வியாழன்) நேரம் காலை 09. 30–10. 30
வாடிக்கையாளர்கள் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்து வாடிக்கையாளர்கள், பொதுமக்கள்,
நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றேன்.

த.தங்கராசா
உரிமையாளர்.

(4213)


## கிளி.அழகியல் கலாமன்றத்தில் பௌர்ணமித் திரைப்படம்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தினரால் பௌர்ணமி தினத்தன்று பௌர்ணமி கலையுணர்வுத் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

அழகியல் கலாமன்ற மண்டபத்தில் 5 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு "கடல்பூக்கள்" எனும் கலையுணர்வுத் திரைப்படம் காண்பிக்கப் பெறவுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து விமர்சனக் கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளதென அழகியல் கலாமன்ற முதல்வர் க.விஜயசேகரன் தெரிவித்துள்ளார். (சோ)


## முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரிகள்

### புதிய வகுப்புப் பிரிவுகள் ஆரம்பம்

எதிர்வரும் 05-02-2004 வியாழன் (தைப்பூசத் தினம்) அன்று முள்ளியவளை நுண்கலைக்கல்லூரி, புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி ஆகிய இரண்டிலும் சகல கலைப் பிரிவுகளுக்கும் புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். நாள் வகுப்புக்களுக்கான நேரம்.

முள்ளியவளை நுண்கலை – மாலை 3.30 மணி
புதுக்குடியிருப்பு நுண்கலை – மாலை 5.00 மணி

சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

(4210) நிர்வாகத்தினர்.



## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் பணியாளர் திரு.சி.காந்தி அவர்களின் தந்தையார் 02.02.2004 அன்று யாழ்ப்பாணத்தில் காலமாகிவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பணியாளர்கள்,
யோகபுரம் மகாவித்தியாலயம்.

(4104)



## துயர் பகிர்கின்றோம்



### திருமதி கதிரவேலு பூமணி

எமது நிறுவனத்தின் சக பணியாளர் க.சுரேந்திரன் (இந்திரன்) அவர்களின் தாயாரின் மறைவையொட்டி பிரிவுத் துயரில் இருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

சக பணியாளர்,
தமிழ்மதி நகைமாடம்,
வட்டக்கச்சி.

(4209)



## சாவு அறிவித்தல்

### நாகமணி தவராசா

124 D10 உருத்திரபுரம் கிளிநொச்சியை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி தவராசா என்பவர் 29.01.2004 பிரான்சில் காலமானார். இவர் காலஞ்சென்ற நாகமணி வள்ளியம்மை ஆகியோரின் அருமை மகனும் திரு/திருமதி திருநீலகண்டர் ஆகியோரின் மருமகனும் லட்சுமிதேவியின் பாசமிகு கணவரும் அபிநயாவின் அன்புத் தந்தையும், சிங்கராசா, (காலஞ்சென்றவர்களான மனோன்மணி, செல்வராசா, சாம்பசிவம்) சிறோண்மணி, கிருஸ்ணமணி, சிவமணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராசா,கிருஸ்ணசோதி, காலஞ்சென்ற தவமலர்,புஸ்பமலர், ராச்குமார் (லண்டன்) உதயபாலன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். இவரது ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லமான 1,RUEHENTRY, RANVIER, 7500m,PARIS, FRANCE இல் 04.02.2004 நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா.சிங்கராசா(சகோதரன்)
குடும்பத்தினர்.
124 D-10, உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

(4212)




பரவிவரும் பறவைக்காய்ச்சல் வைரஸினால் பாதிக்கப்பட்டு இறந்த தமது மகளின் உடலை பாங்கொங் வைத்தியசாலையில் கண்டு புலம்பியழும் தாய்.

# வை. கோவுக்கு கடும் நிபந்தனைகளுடன் பிணை; பொடோ நீதிமன்றின் முடிவு தீவிர பரிசீலனை!

(சென்னை)

**பொடோ சட்டத்தில் கைது செய்யப்பட்ட ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வை. கோவுக்கு பூந்தமல்லி பொடோ நீதிமன்றம் நிபந்தனையுடனான பிணை மனுவில் வெளிவர நேற்று அனுமதி வழங்கியுள்ளது.**



ஆனால், வை.கோ நிபந்தனைகளை ஏற்பது பற்றித் தமது வழக்கறிஞருடன் கலந்தாலோசித்துக் கூறுவதாகக் கூறியுள்ளார். நீதிபதியின் தீர்ப்பில் ஐம்பது ஆயிரம் ரூபா சொந்த பிணையும், ஐம்பதாயிரம் ரூபாவுக்கு இரு நபர் பிணையும் வழங்க வேண்டும்.

அத்துடன் சென்னை நகரை விட்டு வெளியேறக் கூடாது. பேட்டியளிக்கக் கூடாது. வெளியூருக்குச் செல்வதனால் பூந்தமல்லி நீதிமன்றத்தில் முன் அனுமதி பெற வேண்டும். பத்திரிகைகளுக்கு இவ்வழக்குப் பற்றியோ எதுவானாலும் பேட்டியளிக்கக் கூடாது; பொதுக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளை ஆதரித்தோ, இந்த வழக்குத் தொடர்பாகவோ பேசக் கூடாது, பொது மக்கள் கூட்டங்களில் ம.தி.மு.க. வினரும் விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசக் கூடாது, விசாரணையை விரைவாக முடிக்க நீதிமன்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அத்துடன் விடுமுறை நாட்களில் சென்னை புறநகர் நீதிமன்றத்தில் கையெழுத்திட வேண்டும், கடவுச் சீட்டை நீதிமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்பவை உள்ளிட்ட நிபந்தனை பிணையை நீதிபதி ராஜேந்திரன் வழங்கியுள்ளார்.

இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதாக வை.கோ பத்திரம் தாக்கல் செய்தால் மட்டுமே பிணையில்செல்லஅனுமதி கிடைக்கும் என்றும் நீதிபதி கூறி யுள்ளார்.

இத்னையடுத்தே நிபந்தனைகளை ஏற்பது பற்றிய தமது முடிவை வழக்கறிஞருடன் கலந்தாலோசித்துக் கூறுவதாக வை.கோ நீதிபதியிடம் நேற்றுக் கூறியுள்ளார்.

# 10 மாடிக் கட்டடம் இடிந்து துருக்கியில் எண்மர் உயிரிழப்பு!

## -இழப்புக்கள் உயரலாம்

(அங்காரா)

துருக்கில் 10 மாடிக் கட்டடமொன்று இடிந்து வீழ்ந்துள்ளது. இதில் எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர். 25க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளார்கள்.

துருக்கி தலைநகர் அங்காராவுக்கருகே ஷெல்குழு எனுமிடத்தில் நேற்றுக்காலை பத்துமாடிக்கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்துள்ளது.

நகரின் கடும் பனிக்குளிர் இருப்பதால் இடிபாடுகளிடையே மீட்பு நடவடிக்கை தாமதமாகியிருந்தது.

சாதாரண அதிர்வுகளைகூட தாங்க முடியாது கட்டடங்கள் கட்டப்பட்டு இருப்பது தான் இவ்வாறு கட்டடங்கள் இடிந்து வீழ்வதற்கான காரணமென்று அதிகாரிகள் கூறியுள்ளார்கள்.

அண்மையில் மிகப்பெரிய நகரமான இஸ்தான் புல்லில் கல்லூரி ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 10 மாணவர்கள் உயிரிழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



சீனாவிலும் பறவைக்காய்ச்சல் வைரஸ் பரவியதாக தகவல் கிடைத்துள்ளதையடுத்து சுகாதாரத் தொண்டர் ஒருவர் குபாய் மாநிலத்திலுள்ள கோழிச் சந்தையில் கிருமிநாசினி விசுறுகின்றார்.

# பதவி விலகிய டேவிட்கேயை அழைத்து அமெரிக்க சனாதிபதி கலந்துரையாடல்!

## -சந்திப்பு ஆக்கபூர்வமாக அமைந்ததாம்

(வாஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஈராக்கின் முன்னாள் தலைமை ஆயுத ஆய்வாளர் டேவிட்கேயை சந்தித்து உரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்புக் குறித்து வெள்ளை மாளிகை தெரிவிக்கையில்; இது ஒரு ஆக்கபூர்வமானது என்று கூறியுள்ளது.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுப்பதை நியாயப்படுத்துவதற்காகப் பெறப்பட்ட ஊகத் தகவல்களில் ஏதாவது குறைபாடுகள் உண்டா என்று கண்டறிய சுயாதீன விசாரணைக்குழு ஒன்றை அமைக்கப் போவதாக ஜோர்ஜ்புஷ் நேற்று முன்தினம் அறிவித்த பின்னர் இந்தச் சந்திப்பு நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுப்பதற்கு முன்னர் பெறப்பட்ட உளவுத் தகவல்கள் பற்றி விசாரணை செய்வதற்கு அமெரிக்க சனாதிபதி எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

ஆனால், குடியரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் சனநாயகக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் விசாரணைக்கு உத்தரவிடும்படி சனாதிபதிக்கு அழுத்தங்களைக் கொடுத்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## புஷ்சின் செல்வாக்கு 50 வீதத்தால் வீழ்ச்சி!

(வாஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சின் செல்வாக்கு அமெரிக்காவில் ஐம்பது சதவிகிதத்தால் சரிந்துவிட்டதாகக் கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

ஈராக் மீதான போர் மற்றும் வெளிவிவகாரங்கள், பொருளாதாரம் ஆகியவற்றை சனாதிபதி ஜோர்ஜ் புஷ் கையாளும் முறை தொடர்பாக அதிருப்தி அதிகரித்த நிலையில் அவருடைய செல்வாக்கு ஐம்பது சதவிகிதத்திற்கும் கீழே சரிந்து விட்டதெனப் புதிய கருத்துக் கணிப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சனாதிபதி பதவிக்கான சனநாயகக் கட்சி வேட்பாளர் செனற்சர் ஜோன்கேட் சனாதிபதி புஷ்சை விட ஏழு புள்ளிகள் அதிகம் பெற்று முன்னணியில் நிற்கின்றார்.



இந்தியாவில் விரைவில் நடைபெறவுள்ள தேர்தல் குறித்து பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள இந்திய துணைப் பிரதமர் அத்வானி, தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா ஆகியோர்.

# இந்திய மக்களவை தேர்தல் மார்ச் இறுதியில் ஆரம்பமாகும்!

## -தேர்தல் ஆணையகம் ஆலோசனை

(புதுடில்லி)

ஏப்பிரல் இறுதிக்குள் பதின்நான்காவது பாராளுமன்ற மக்களவைத் தேர்தலை நடத்தி முடிப்பதற்கான பணிகளை முடுக்கி விட்டுள்ள இந்திய மத்திய தேர்தல் ஆணைக்குழு இதன் முதல் கட்டமாக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தேர்தல் அதிகாரிகளின் கூட்டத்தை இன்று கூட்டியுள்ளது.

நாடு முழுவதும் மூன்று அல்லது நான்கு கட்டங்களாகத் தேர்தலை நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்ற முடிவைத் தேர்தல் ஆணைக்குழு எடுக்கும் பட்சத்தில் முதல் கட்ட வாக்குப் பதிவு மார்ச் இறுதி வாரத்தில் நடைபெற வாய்ப்புள்ளது.

# உள்துறை பாதுகாப்பு செலவீனம் பத்து சதவீதத்தால் அதிகரிப்பு

## -சனாதிபதி புஷ் தீர்மானம்

(வாஷிங்டன்)

2005ஆம் ஆண்டிற்கான உள்துறைப் பாதுகாப்பு செலவீனங்களை பத்து சதவீதத்தால் அதிகரிப்பதற்கு அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் டபிள்யூ புஷ் தீர்மானித்துள்ளார்.விமான சேவைகளின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கும் இரசாயன ஆயுதத் தாக்குதல்களிலிருந்தும் அமெரிக்கர்களைப் பாதுகாப்பதற்கும் கூடுதலான நிதி ஒதுக்கப்படவுள்ளது.

2005 ஆம் ஆண்டு அமெரிக்காவின் உள்துறைபாதுகாப்புக்காக 4ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்கள் செலவிடப்படவுள்ளது.

# சட்டவிரோத குடியேறிகளைத் திருப்பி அனுப்ப ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நிதியம் அமைப்பு

ஐரோப்பிய நாடுகளில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள சட்ட விரோத குடியேற்றக்காரர்களை மீண்டும் அவர்களது தாய் நாடுகளுக்குத் திருப்பி அனுப்பும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியம் நிதியமொன்றை ஆரம்பித்துள்ளது.

• அயர்லாந்தின் தலைநகர் டப்ளினில் நடைபெற்று வரும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் உட்துறை அமைச்சர்களது மாநாட்டில் எடுக்கப்பட்ட இம் முடிவின் படி முதற்கட்டமாக 30 மில்லியன் யூரோக்கள் சேகரிக்கப்படவுள்ளது.

ஐரோப்பிய நாடுகளுக்கு அகதி அந்தஸ்துக் கோரி வருபவர்களில் அதிகமானோர் பொருளாதார நோக்கங்களுக்காகவே இவ்வாறு வருகின்றனர். இவர்களில் அதிகமானோர் மூன்றாம் மண்டல நாடுகளில் இருந்தே வருகின்றனர். இவர்களது உண்மையான எண்ணிக்கை சரியாகத் தெரியாத போதிலும் இந்த எண்ணிக்கை மிகமிக உயர்ந்ததாக இருக்கின்றது என ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த சட்டவிரோத குடியேற்றக்காரர்களின் பிரச்சினையால் கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பிய நாடுகளே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே இப்பிரச்சினையைச் சமாளிப்பதற்காக ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படுவதெனவும் இதன் முதற்கட்டமாக நிதியமொன்றைத் தாபிப்பது எனவும் தீர்மானித்துள்ளன.

இதேவேளை, இச்சட்டவிரோத குடியேற்றவாசிகளால் ஜேர்மனியே பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. இக் குடியேற்றவாசிகளில் அதிகமானோர் பாகிஸ்தான்,பங்களாதேஷ் மற்றும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய கணிப்பீட்டின்படி, ஜேர்மனியின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 17 சதவீதம் அல்லது 3,70,000 மில்லியன் யூரோக்கள் இவர்களிடம் சென்றடைவதாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

## 'நாசகாரி' சென்னை வருகை

பிரான்ஸின் நாசகாரி கப்பலான லக்ஷி ஷிவிலி நான்கு நாள் நல்லெண்ணப் பயணத்தில் சென்னை வந்துள்ளது.

இந்த நாசகாரிக்கப்பலில் இருந்து தரையைத்தாக்கும் ஏவுகணைகள், வானைத்தாக்கும் ஏவுகணைகள் நீர்மூழ்கிக் கப்பல்களைத் தாக்க வல்ல குண்டுகள் என்பன பொருத்தப்பட்டுள்ளன.

# கடந்த வாரத்தில்...

**26.**

* காரைநகர் கஞ்நேவா கடற்படைக காவலரன் ஒன்றில் கடற்படைச் சிப்பாயின் சடலம் சூட்டுக் காயத்துடன் மீட்பு.

* நோர்வே தூதுவர் பிரஸ்கர் மட்டக் களப்பிற்கு இரண்டு நாள் விஜயம் மேற் கொண்டு பல தரப்பினரையும் தனித்தனியாகச் சந்தித்தார்.

* ஈராக்கில் தேடுதல் நடத்திய உலங்கு வானூர்தி வீழ்ந்து நொருங்கியது. 3 அமெ ரிக்கப் படையினர் காணாமல் போயினர்.

* இந்தியாவின் 55 ஆவது குடியரசுதினம் அசம்பாவிதங்கள் இன்றி நடைபெற்றது.

* எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள நாஸாப் பகுதியில் வணிக வளாகம் தீப்பிடித்ததில் 5 பேர் பலி; 40 பேர் காயம்.

**27.**

* அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான விடுதலைப்புலிகள் குழுவினர் பல ஐரோப்பிய நாடுகளுக்கான பயணமொன்றை மேற்கொண்டு கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டனர்.



அரசியல்துறைப்பொறுப்பாளர் பயணம்...

* மட்டக்களப்பு கரடியனாறு தேனகம் விருந்தினர் விடுதியில் நோர்வே தூதர் பிரஸ்கார் மூத்த தளபதி கேணல் கருணாவைச் சந்தித்து மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர மனிதாபிமானப் பணிகள், சமாதான நடவடிக்கையில் ஏற்பட்ட தேக்கம் ஆகியன குறித்துக் கலந்துரையாடினர்.

* விடுதலைப்புலிகளால் பிரிட்டனுக்கு எதுவித பாதிப்பும் இல்லாத காரணத்தினால் பிரிட்டனில் புலிகள் இயக்கம் மீதான தடையை விலக்க முன்வர வேண்டும் என பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீவன் இவன்சிடம் அமைச்சர் மகேஸ்வரன் வேண்டுகோள்.

* காபூலில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் இருவர் பலி.

* ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க அனுராவைச் சந்தித்து எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடினார்.

* வை.கோ.வின் பிணை மனு மீதான விசாரணையை நீதிமன்றம் தள்ளிவைத்ததால் கோபமடைந்த வை.கோவின் வழக்கறிஞர்கள் நீதிமன்றில் இருந்து வெளிநடப்பு.

**28.**

* பா.ஜ.கட்சி-அ.தி.மு.க. கூட்டணி உருவானது.

* பாக்தாத்தின் மத்திய பகுதியான கரடா மாவட்டத்தில் உள்ள விடுதியில் நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் நால்வர் பலி; 17 பேர் காயம்.

* காஸாப் பகுதியில் இஸ்ரேலியர் மேற்கொண்ட தாக்குதலில் 8 பலஸ்தீனர் உயிரிழப்பு.

**29.**

* ஜெருசலத்தில் உள்ள இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனின் உத்தியோகபூர்வ வாசஸ் தலத்திற்கு அருகில் பயணிகள் பஸ்ஸில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர்; 40 பேர் காயம்.

* இஸ்ரேலும், லெபனானும் ஜேர்மனில் உள்ள 'கொலக்கினி' இராணுவத் தளத்தில் பரஸ்பரம் கைதிகளைப் பரிமாறிக்கொண்டனர்.

* ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது பொதுக் கூட்டம் கொழும்பு மாநகர சபை மைதானத்தில் எதிர்பார்க்கப்பட்ட அவசரமோ சனக்கூட்டமோ, இன்றி நடைபெற்றது.

**30.**

* நோர்வே வெளிவிவகார அமைச்சர் உட்பட உயர் மட்டத்தினரிடம் வடக்கு-கிழக்கிற்கான மனிதாபிமான உதவிகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென அரசியல்துறைப் பொறுப்பாளர் வலியுறுத்தினார்.



உயர் மட்டச்சந்திப்பு

* சிறிலங்கா படையினருக்கான பயிற்சிகளையும், படைக்கல உதவிகளையும் வழங்கும் "இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு" உடன்பாட்டில் சிறிலங்காகவும்-ரஷ்யாவும் கைச்சாத்திட்டுள்ளன.

* இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸின் வழக்குடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் முன்னாள் விமானப் படையின் ஸ்குவாட்லண்ட் லீடர் ருக்மன் ஹேரத் கொழும்பு கிருலப்பனையில் வைத்துச் சுட்டுக் கொலை.

* சனாதிபதியைச் சந்தித்த வி.ஆனந்தசங்கரி இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம், சமாதான முயற்சிகளைப் பின் தள்ளும் என எச்சரித்தார்.

* இலங்கையின் அரசியல் நிலவரம் குறித்தும் பல்வேறு விடயங்கள் குறித்தும் சுவிஸ் வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் மிலிந்த மொறகொட விளக்கமளித்தார்.

* ஜெருசலேமில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு பழிவாங்கும் நோக்குடன் டாங்கிகள் கவசவாகனங்கள் சகிதம் மேற்குக் கரைக்குள் இஸ்ரேலியப் படை நுழைந்தது.

**31.**

*அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர் நொபல் பரிசுக் குழுத்தலைவரும் ரொம்சோ பல்கலைக்கழக பேராசிரியருமான ஒலி.டி.எம். ஜோசெபைத் சந்தித்தனர்.

மாலை நோர்வே மீன்பிடி விஞ்ஞானக் கல்லூரி பேராசிரியர்கள், விரிவுரையாளர்களை சந்தித்து தென்பகுதி அரசியல் பிரச்சினைகள் தொடர்பாகவும், வடக்குக் கிழக்கில் உள்ள கடற்தொழிலாளர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

* பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான ஜப்பானிய உயர்மட்ட தூதுக்குழுவினர் கிளி. வைத்தியசாலையில் நடைபெற்று வரும் புனரமைப்புப் பணிகளை நேரில் பார்வையிட்டனர்.

*முல்லை. மாவட்ட நுண்கலைக் கல்லூரி ஆண்டுவிழா சிறப்புற நடைபெற்றது.

*ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரவன்ச, செயலாளர் ரில்வின் சில்வா, பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, எஸ். சிவதாசன் ஆகியோர் சந்தித்து தற்போதைய அரசியல் நிலவரம் பற்றிக் கலந்துரையாடினர்.

*சவுதி தலைநகரான றியாத்தில் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் ஐந்து பொலிசார் பலி.

*ஈராக்கின் எண்ணெய்வள நகரான இர்குக்கிலிருந்து தென்மேற்கே 25 மைல் தொலைவிலுள்ள இடத்தில் அமெரிக்க இராணுவ வாகனத் தொடரணி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 3 அமெ. படையினர் பலி.

* ஈராக்கின் மூன்றாவது தலைநகரான மோதலில் பொலிஸ் நிலையம் மீது நடத்தப்பட்ட தற்கொலைத்தாக்குதலில் 9 பேர் பலி; 45பேர் படுகாயம்.

* பிரிட்டனின் ஊட்டிக்ஸ்ரொான் நகரில் அமைந்துள்ள போஷ்பாக் முதியோர் இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 11பேர் பலி.

**1.**

* அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சங்கீதப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற முள்ளியவளை நுண்கலைக் கல்லூரி மாணவி செல்வி மகேந்திரம் மயிலாசினி அவர்களுக்கு தமிழீழ தேசியத் தலைவரின் கையெழுத்து பொறிக்கப்பட்ட சான்றிதழ் பணப்பரிசு என்பன அரசியல் துறை துணைப் பொறுப்பாளரினால் வழங்கப்பட்டது.



கௌரவிப்பு

* சவுதி அரேபியாவில் மொக்காவுக்கு அருகே மதீனாவில் ஏற்பட்ட மக்கள் நெரிசலில் 250 பேர் பலி 244 மேற்பட்டோர் படுகாயம்.



மக்கள் நெரிசலின் அவலம்

* பாக்தாத்தில் உள்ள ஹொலண்ட் தூதரகத்தின் மீது நடத்தப்பட்ட ரொக்கெட் தாக்குதலில் கட்டடத்தின் ஒரு பகுதி அழிந்தது.

* பாக்தாத்திலிருந்து வடக்கே 320கி.மீ. தொலைவிலுள்ள குர்திஸ் நகரத்தில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதலில் குர்திஷ் உதவி பிரதமர் உட்பட 67 பேர் பலி; 235பேர் படு காயம்.

* ஈராக்கின் கர்பாலா நகருக்கு 180கி.மீ. மேற்கே ஆயுதக் ... ங்கு வெடித்துச் சிதறியதில் 20 பேர் ப...

# பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்கு உடற்சோதனைகளின்பின் பக்தர்கள் அனுமதி!

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்கு வழிபடச் செல்வோர் மீது படையினர் பலவித கெடுபிடிகளை புரிந்து வருவதாக பக்தர்கள் விசனம்தெரிவிக்கின்றனர்.

இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு அண்மையாக மேற்படிஆலயம் அமைந்துள்ளது. இதனால் படையினர் தமது பாதுகாப்பினை காரணம்காட்டி பலவித கெடுபிடிகளில் ஈடுபடுகின்றனர்.

வரலாற்று புகழ் பெற்ற இவ்வாலயத்திற்கு வழிபட செல்வோரை படையினர் அடையாளஅட்டை பரிசோதனைமற்றும் உடற்பரிசோதனைகளுக்கு உட்படுத்து வதுடன் தீவிர விசாரணைகளிலும் ஈடுபடுத்தி வருகின்றனர்.இதனால் அடியவர்கள் இயல்பான நிலையில் ஆலய வழிபாட்டை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படுவதாக பக்தர்கள் தரப்பில் இருந்து விசனம் தெரிவிக்கப்படுகிறது. (33)

# வவுனியாவில் களவுகளுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் சிலர் கைது

## -களவாடப்பட்ட நகைகள் வங்கிகளில் அடகு

(செட்டிகுளம்)

வவுனியாவில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் களவுகளுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிசார் தெரிவிக கின்றனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் தொடர்ச்சியாக விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகவும் பல தகவல்கள் பெறப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் களவு செய்த பெரும்பாலான நகைகள் வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (21)

# கண்டாவளைக்கான பேருந்து சேவை நிறுத்தத்தால் மக்கள் பாதிப்பு

(கண்டாவளை)

கண்டாவளை கிராமத்துக்கு பேருந்து சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றனர் இப் பகுதியிலிருந்து 5மைல் தூரம் சென்று வெலிக்கண்டல் சந்தியை அடைந்தே பேருந்தில் பயணிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

இதனால் அரச/அரசசார்பற்ற நிறுவன ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள், மற்றும் அத்தியாவசியத் தேவைகருதி தூர இடங்களுக்கு செல்பவர்கள் என அனைவரும் பெரும் துன்பத்துக்குள்ளாகி வருகின்றனர்.

மழைகாலம் தொடங்குவதற்கு முன்னர் சில மாதங்களாக தொட்டியடிப் பகுதியிலிருந்து புறப்படும் பேருந்து கண்டாவளைக்கு காலை 7.30மணிக்கு வந்து திரும்பி கிளி. நகர் சென்று மீண்டும் பி.ப. 1.30 மணிக்கு கண்டாவளைக்கு வந்து திரும்பி கிளி நகர் சென்று மாலை 5.30 மணிக்கு கண்டாவளையூடாக சென்றடையும் அச்சேவை தற்போது நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (14)

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவர் காவல் துறையால் கைது!

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி காவல் துறையினரால் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபர்ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.கட்டைக்காடு பகுதியிலேயே குறித்த நபரிடமிருந்து 12 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது.மேலும்கைதான இவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (12)

# மூங்கில் படகுமூலம் திருமலையில் கரை ஒதுங்கிய பிள்ளையார் சிலைகள்

மூங்கில் படகொன்றில் தங்கத்தினால் மிக அழகாக அமைக்கப்பட்ட கூட்டினுள் மூன்றரை அடி உயரமான இரு பிள்ளையார் சிலைகள் திருமலை உப்பாறு சின்னவேவி கடற்கரையில் ஒதுங்கின.இதனை அங்குள்ளமீனவர்கள்சம்பூர் தமிழீழகாவல் துறையினருக்கு அறிவித்ததுடன் அவர்கள் உடன் வந்து அவற்றைக் காவல் பணிமனைக்கு எடுத்து சென்றுள்ளனர்.

# ஊரக தேசிய எழுச்சிப் பேரவை நிர்வாகம் புனரமைப்பு

உடையார்கட்டு தெற்குத் தேசிய எழுச்சிப் பேரவை நிர்வாகப் புனரமைப்பிற்கான ஒன்று கூடல் உடையார்கட்டு முருகன் கோவில் முன்றலில் புதுக்குடியிருப்பு கோட்ட தே.எ. பேரவையைச் சேர்ந்த தம்பு விநாயகமூர்த்தி தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.


இங்கு கருத்துரையை உடையார்கட்டு தெற்கு கிராம அலுவலர் வழங்கியதையடுத்து புனரமைப்பு நிர்வாகம் அமைக்கப்பட்டது.

இதில் தே.எ. பேரவைச் செயலாளராக பொ.சிவா, உபசெயலாளராக தசசன், பொருளாளராக அழகேஸ் ஆகியோரும் உறுப்பினர்களாக சுதா, திருமதி அருளம்பலம், கேசவன், திருமதி லலிதா, க.விஜயகுமார், இராமநாதன் என்போரும் தெரிவாகினர் (19)

# இந்திய-சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பந்த ஒத்திவைப்பு சந்திரிகாவிற்குப் பலத்த ஏமாற்றம்!

சிறிலங்கா அரசு-குறிப்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மிகவும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த இந்திய-சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இவ் ஒத்திவைப்பிற்கு உத்தியோக பூர்வ காரணிகள் எவையும் அறிவிக்கப்படவில்லை. ஆயினும், சில காரணிகள் இந்திய இராஜதந்திர வட்டாரங்களினால் முன்நிறுத்தப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

1. இந்தியாவில் பொதுத் தேர்தல் ஒன்று விரைவில் நடைபெறவுள்ளமையும்,
2. சிறிலங்கா ஆட்சியிலுள்ள இரு தரப்பிற்கும் இடையிலான அதிகாரப் போட்டிகாரணமாக-







இவ் ஒப்பந்தம் ஏற்படும் பட்சத்தில் அரசியலில் அது ஏற்படுத்தக்கூடிய விளைவுகளும் காரணமாகவுவே இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதை இந்தியா ஒத்திவைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியா-சிறிலங்கா பாதுகாப்பு உடன்பாட்டின் 'திட்டவரை ' முழு அளவில் அறியப்படாத நிலை ம் இவ் உடன்பாடு குறித்த எதிர்பார்க்கைகள் அதிகளவில் ஏற்பட்டதொன்றாகவே இருந்தது. ஒருவகையில் விடுதலைப்புலிகளுடனான இராணுவச் சமநிலையில் தம்மை மேம்படுத்திக் கொள்வதற்கான அரியதொரு சந்தர்ப்பமாக இவ் உடன்பாடு சிறிலங்கா ஆட்சியாளர்களினால் கொள்ளப்பட்டது.

சிறிலங்கா ஆட்சியாளர்களைப் பொறுத்து இரு தரப்புமே (ஐ.தே.முன்னணி-பொ.ஐ.முன்னணி) இவ் உடன்பாட்டில் அக்கறை கொண்டிருந்தன. இவ்விரு தரப்பினரும் தமது காலப்பகுதியிலேயே இவ் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது என்பதன் மூலம் அரசியல் ஆதாயம் ஈட்ட முடியும் என நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இவ் உடன்பாட்டைச் செய்துகொள்வது தொடர்பாக ஐ.தே.முன்னணி அரசாங்கம் மேற்கொண்ட நிலைப்பாடானது, இலங்கையின் ஐக்கியத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும் விடுதலைப்புலிகளால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பை இந்தியாவின் உதவியுடன் பெற்றுக் கொள்ளுதல் என்பதன் அடிப்படையில் அமைந்தது. அதாவது கடந்த கால ஒத்துழைப்பின் விரிவாக்கமாக உடன்பாட்டை அமைத்துக் கொள்ளுதல் என்பதாகும்.

ஆனால், சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசின் நிலைப்பாடானது விடுதலைப்புலிகளின் வளர்ச்சியானது இலங்கையின் ஒருமைப்பாடு,ஐக்கியம் என்பவற்றிற்கு மட்டுமல்ல, இந்தியாவின் ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பவற்றிற்கும், இலங்கையிலுள்ள இந்தியாவின் நலன்களுக்கும் பாதகமானது என்பதாக இருந்தது. இந்நிலையில் இந்தியாவின் தலையீடு வெளிப்படையான இருத்தல் வேண்டும் என்பதாகியது. இதற்கு இவ் உடன்பாடு அவசியமானதாகியது.

சனாதிபதி சந்திரிகாவினதும், அவரது சிரேஷ்ட ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் கடந்த காலத்தில் இந்திய நலன்கள் பற்றி அதிகளவில் பேசியதனை இங்கு சுட்டிக் காட்ட முடியும். திருமலைத்துறைமுகத்திற்கும், நகரத்திற்கும் புலிகளால் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்பதில் இருந்து, வடக்கு கடற்பரப்பில் தமிழக மீனவர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பது வரையிலான கதிர்காமரின் பிரச்சாரங்கள் இதன் அடிப்படையானதே ஆகும்.

இதேசமயம் இவ்விரு தரப்பும் இவ் இராணுவ உடன்பாடு விடுதலைப்புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டிற்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர். இதன் விளைவாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய அதேவேளை, இப்பாதுகாப்பு உடன்பாடு குறித்துப் பேச்சுக்களை நடத்தியது.

இப்பாதுகாப்பு உடன்பாடானது, விடுதலைப் புலிகளுக்கு எதிரான சர்வதேச பாதுகாப்பு வலைப் பின்னலின் ஒரு முக்கிய அங்கம் என்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானமாகும். இவ் உடன்பாட்டின் மூலம் விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியிலான அச்சுறுத்தலுக்கு, நெருக்குதலுக்கு உள்ளாக்கிவிடலாம் என்பதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பாகும். இதன் காரணமாக இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதானது மக்கள் மத்தியில் தமது செல்வாக்கை நிலைநிறுத்த உதவும் என்பது ரணில் விக்கிரமசிங்கவின் மதிப்பீடாகும்.

ஆனால், பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதன் மூலம் சனாதிபதி சந்திரிகா ஐ.தே.முன்னணிக்குத் தெளிவானதொரு முட்டுக்கட்டையைப் போட்டர். பாதுகாப்புத் தொடர்பாக உடன்பாட்டைச் செய்துகொள்ளும் வலுவை அதனிடம் இருந்து பறித்தெடுத்தார்.

இதேவேளை, இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தத்தை-அதாவது பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கம் ஆரம்பித்த உடன்பாட்டு முயற்சிகளை சனாதிபதி சந்திரிகா முன்னெடுக்கத் தயாரானார். சிறிலங்கா அர சியலில் அபூர்வமாக நிகழும் அதிசயங்களில் ஒன்றான எதிர்த்தரப்பின் கோரிக்கைகள், நடவடிக்கைகள் என்பவற்றைத் தொடரும் வகையில் ஐ.தே.முன்னணியின் முயற்சிகளைத் தொடர்ந்து சனாதிபதி சந்திரிகாவும் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்துப் பேச்சுக்களைச் செய்து கொள்வதில் அக்கறை காட்டினார்.

ஆயினும், சிறிலங்கா அரசாங்கத் தரப்பில் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் அளவில் இந்திய தரப்பில் கொடுக்கப்பட்டதாக இல்லை. இவ் உடன்பாடு குறித்து இந்திய அரசியல் வட்டாரங்களில் மிகப்பெரும் ஆவல் காட்டப்பட்டதாகவும் இல்லை. சுருக்கமாகக் கூறப்பட்டால் இந்திய அரசின் தலைவர்களினால் இவ் விவகாரத்திற்கு முதன்மை அளிக்கப்படவில்லை.

ஆயினும் இந்திய தரப்பு முற்றுமுழுதாக இவ்விடயங்களில் அக்கறை அற்றிருந்தது என்றும் கூறுவதற்கில்லை. சிறிலங்காவுடன் பாதுகாப்பு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வதென்பது தனது பிராந்திய நலன்களைப் பாதுகாப்பதோடு இப்பிராந்தியத்தில் மேற்குலக நாடுகளின் ஊடுருவலைத் தடுத்து நிறுத்த உதவும் என்பது இந்திய தரப்பு நோக்கமாகும்.

ஆனால், இந்தியா பாதுகாப்பு உடன்பாடு ஒன்றின் மூலம் தமது நலன் பாதுகாக்கப்படுவதை வரவேற்பதாக இருப்பினும், சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியில் தமது பெயர் இழுக்கப்படுவதையோ அன்றி நாறடிக்கப்படுவதையோ அது விரும்பவில்லை. அதிலும் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் இத்தகைய குழப்பநிலை தோன்றுவதை இந்தியா விரும்பவில்லை.

இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடானது ஐ.தே.முன்னணி அரசாங்கதீதைப் பொறுத்துக் குறிப்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்து மகிழ்ச்சி தரும் விடயமாகவே இருக்கும். ஏனெனில், தான் கையொப்பம் இடவேண்டிய உடன்பாட்டில் எதிர்த்தரப்பு கையொப்பம் இடுவதும், உடன்பாட்டின் விளைவான அனுகூலங்களை அது தட்டிச் செல்வதையும் அவர் விரும்பியிருக்க முடியாது.

ஒருவகையில் இவ் உடன்பாடு கைச்சாத்திடுவதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை அவர் மேற்கொண்டிருந்தார் என்று கூடக்கூறலாம். குறிப்பாக அவர் அமைச்சர் மிலிந்த மொறகொடவை டில்லிக்கு அனுப்பி வைத்து, தற்போதைய சூழ்நிலையில் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதைப் பின்தள்ளி வைக்குமாறு கேட்டுக்கொண்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதேவேளை, இவ் உடன்பாடு கைச்சாத்திட முடியாமற் போனமையானது, சனாதிபதி சந்திரிகாவிற்குப் பெரும் ஏமாற்றம் அளிக்கும் ஒன்றாகவும் நிச்சயம் இருந்திருக்க முடியும். ஏனெனில், இவ்வுடண்பாடு செய்துகொள்ளப்பட்டிருக்குமானால், இலங்கையின் பாதுகாப்பு ஒருமைப்பாடும் தன்னால் உறுதி செய்யப்பட்டது என சனாதிபதி சந்திரிகா மார்பு தட்டியிருக்கக் கூடியவர். இது சிலவேளைகளில் இலங்கையில் நிலவும் தற்போதைய சமாதானச் சூழ்நிலைக்கே பங்கம் விளைவிக்கத் தக்கதொன்றாகவும் இருந்திருக்கும்.

அதாவது இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலான அணுகுமுறை-அன்றி விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையுடனான பேச்சுவார்த்தை என்ற ரீதியிலான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள சனாதிபதி சந்திரிகாவிற்கு இப்பாதுகாப்பு ஒப்பந்தம் உற்சாகம் ஊட்டுவதாக இருநதிருக்கும்.

அது மட்டுமல்ல, தற்பொழுது மேற்குலகின் அழுத்தத்திற்கு உள்ளாகியிருக்கும் அவர் அவற்றைப் புறம் தள்ளிவிடவும், தமது விருப்பப்படியிலான அரசியல்-இராணுவ வழிமுறைகளைத் தேர்ந்தெடுப்பதற்கான துணிவும் கிடைக்கப்பெற்றிருக்கும் இந்நிலையில், இந்தியா பாதுகாப்பு உடன்பாட்டை ஒத்திவைத்ததானது சனாதிபதிக்குப் பெரிதும் ஏமாற்றத்தைக் கொடுப்பதாகவே இருந்திருக்கும்.

அத்தோடு, இவ் உடன்பாடு கைச்சாத்தானது - தாமதமானது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சிரேஷ்ட ஆலோசகரான லக்ஷ்மன் கதிர்காமரின் இராஜதந்திர முயற்சிகளுக்கு ஏற்பட்ட ஒரு பின்னடைவு என்று கூடக் கூறலாம். ஏனெனில், இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் தலையீட்டின் மூலம் விடுதலைப்புலிகள் மீதான அழுத்தம் ஒன்றைப் பிரயோகிக்க முனைப்புடன் செயற்பட்டவர் லக்ஷ்மன் கதிர்காமராகும். அதாவது, விடுதலைப்புலிகள் மீது மேற்குலகம் பெரும் இராஜதந்திர அழுத்தங்களை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை வளர்ச்சி கண்டுள்ள நிலையிலும், ரணில் அரசாங்கத்திற்கு ஆதரவானதொரு நிலைப்பாட்டை மேற்குலகு எடுத்துள்ள நிலையிலும் இந்தியா மூலம் அதனைச் சரிசெய்ய கதிர்காமர் பெரு முயற்சி மேற்கொண்டிருந்தார்.

இனப்பிரச்சினை ஒருபுறம் இருக்க, இவ் உடன்பாடு ஒன்று ஏற்பட்டிருக்குமானால், தற்போதைய அரசியல் சூழ்நிலையை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளைக் கூட சனாதிபதி சந்திரிகா மேற்கொண்டிருக்க வாய்ப்புண்டு. அதாவது, ஆட்சிக் கவிழ்ப்பொன்றைச் செய்வதற்கு சனாதிபதிக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கும். அதாவது. ஆட்சிக் கவிழ்ப்பால் ஏற்படக் கூடிய நெருக்கடியைக்கூட இந்தியாவின் உதவியுடன் வெற்றி கொள்ளலாம் என அவர் முயற்சிகளை மேற்கொண்டிருக்க முடியும்.

இதேவேளை, இந்தியாவின் இந்நிலைப்பாட்டிற்கான காரணி எதுவாகிலும், தற்போதைய சூழ்நிலையில், இலங்கையில் சமாதானத்திற்குப் பங்கம் ஏற்படாத விதத்தில் இந்தியா நடந்துகொண்டுள்ளது என்று கூடக்கூறலாம். இந்தவகையில் இந்தியாவின் முடிவு வரவேற்கத்தக்கதொன்றே. □

ஜெயராஜ்

## கண்ணிவெடியுள்ள பகுதியை அடையாளம் காண புதிய செடி ஒன்றை அறிமுகப்படுத்தத் திட்டம்

கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கும் பகுதிகளை அடையாளம் காட்டக் கூடிய ஆற்றலுள்ள செடி வகையொன்றை இலங்கையிலும் அறிமுகப்படுத்த பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

டென்மார்க்கிலிருந்து தருவிக்கப்படும் இந்தச் செடிகள், எங்காவது கண்ணி வெடிகள், மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந் தால் அந்தப் பகுதிகளை இனம் காட்டிவிடக் கூடியவை.

இவற்றின் விதைகள் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் இடத்தில் தூவப்படும். கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள சுற்றாடலில் வளரும் இந்த விசேட வகைச் செடிகள் சிவப்பு நிறத்திலும், கண்ணி வெடிகள் இல்லாத இடத்தில் வளரும் செடிகள் பச்சை நிறத்திலும் வளரும் ஆற்றலுடையவை.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ள பகுதிகளில் இச்செடியின் விதைகள் வானூர்திகள் மூலம் தூவப்படும். கண்ணிவெடிகளிலுள்ள கந்தகத்தினால் இந்தச் செடிகளில் சிவப்பு நிறமாற்றம் ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது.

தெளிவான நிறமாற்றத்தை இந்தச் செடி தரவல்லதென்பதால் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் புதைக்கப்பட்ட பகுதிகளை மிக இலகுவாக கண்டுபிடிக்க முடியுமெனவும் இந்தச் செடிகள் வரட்சியைத் தாங்கக் கூடியதெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# விசர் நாய் வைரஸ் பரவும் அபாயம் குறித்து எச்சரிக்கை!

(கொழும்பு)

கம்பளையில் விசர் நாய் வைரஸ் பரவும் அபாயம் இருப்பதாகப் பேராதனை மருத்துவமனையைச் சேர்ந்த விலங்கு நோய் வைத்தியர் வசந்த குமார தெரிவித்துள்ளார்

இந்த விசர் நாய் வைரஸ் நோய் கண்ட நாய்களுக்கு மூக்கில் இருந்து சளி வடிவதுடன் இருமல்,வாந்தி,கண்ணில் இருந்து நீர் வடிதல் போன்ற அறிகுறிகள் காணப்படும் என்றும் அவை உணவு உண்ணாமல் இருப்பதுடன் சத்தங்களைக் கேட்க முடியாத நிலையும் ஏற்படும் என்றும் இந்த நோயினால் பாதிக்கப்பட்ட நாய்கள் ஏழு அல்லது எட்டு நாட்களுக்குள் இறந்துவிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தடுப்பூசி மருந்து ஏற்றப்படாத சகல நாய்களுக்கும் தடுப்பூசி மருந்தினை ஏற்றுமாறும் அவர் கேட்டுள்ளார்.

# புலமைப் பரிசில் பரீட்சையில் சில முல்லை.மாவட்ட பெறுபேறுகள்

வெளியான தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் துணுக்காய் கல்வி வலயத்தில் மு/அனிஞ்சியன் குளம் த.க.வி.யில் மூன்று மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

ஜெகதீஸ்வரன் தட்சாஜினி- 149 புள்ளியினைப் பெற்று மாவட்டத்தில் நான்காவது இடத்தையும், இராசகுலசிங்கம் பிரஷணா -134, பரராஜசிங்கம் கோபுசங்கர்- 123 புள்ளிகளைப் பெற்றனர்.முல்லைத்தீவு செம்மலை ம.வியில் 119 புள்ளிகளைப்பெற்று ஆர். ஷகிலன் சித்தியடைந்துள்ளார்.

முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தில் ஜெ.லக்ஸ்மிதா-147, உ.பிரியந்தினி-132, சி.கோசாளினி-126, சி.லக்சனா-124, சி.கிரிசா-124, தநிறாச்-119, சி.சிவாஜினி-118 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் யோ.ஆரண்யா-147, வி.கஸ்தூரி-132, பா.பாலகாசன்-130, தே. தேனுகா-128, ஜெ.ஜனோஜினி-125, க.நிதர்சன்-118, பா.பாமகள்-118 புள்ளிகளும் பெற்றுள்ளனர்.

(ஆ,20)


## பேணுகைக்காக நிறுத்தியுள்ள ஊர்தி (பஸ்) உரிமையாளர்கள் கவனத்திற்கு

எமது கழகத்தில் உறுப்புரிமைபெற்று பயணியர் போக்குவரவுப்பணியில் ஊர்தியினைப் பணியமர்த்தியிருந்த உரிமையாளர்கள் தற்போது அவ் ஊர்தியினைப் பேணு கைக்காக நிறுத்தியிருந்தால் அவ்விபரத்தினை வரும் 15.02.2004 ஆம் நாளிற்கு முன்னர் கடிதமாக எமது பணிமனையில்கையளிக்குமாறு வேண்டுகிறோம்.

நன்றி.

சு.மனோகரன் (தலைவர்),
தனியார் பேருந்து உரிமையாளர் கழகம்,
வன்னி.

(4204)


## விண்ணக வாழ்வில் 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் ⇩ 1938 + 02 + 23



மறைவு ⇩ 2004 + 01 + 05

அமரர்

### நாகமணி சோமசுந்தரம்

(படித்தவாலிபர் திட்டம் பகுதி- 1, திருவையாறு கிளிநொச்சி)

எங்கள் அன்பு அப்பாவே!
அன்பு என்ற சொல்லுக்கே வாழ்வில் உயிர் கொடுத்தீர்களே
அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என்றழைக்க உறவேன்று ஏது? இனி
உங்கள் பிரிவால் எங்கள் வீட்டின் ஒளிவிளக்கு அணைந்துவிட்டது.
நீங்கள் எம்மை விட்டுமுப்பத்தொரு நாள் ஆனாலும்
என்றும் எங்கள் அன்பும் பாசமும் எம் எல்லோரினதும்
உள்ளங்களை விட்டு நீங்காது.

அல்லாரை வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(4206)

உங்கள் பிரிவால் வாடிநிற்கும்
மனைவி,பிள்ளைகள்.

# இலங்கையின் தற்போதைய நிலைமைகளையிட்டு அமெரிக்க, ஜப்பானிய பிரதிநிதிகள் ஆராய்வர்!

## -ஆர்மிரேஜ் குழு டோக்கியோ பயணம்

**இலங்கையின் சமாதான முயற்சிகள் மற்றும் தென்னிலங்கையில் தோன்றியுள்ள அரசியல் குழப்ப நிலைகள் என்பன தொடர்பாக ஜப்பான், அமெரிக்க நாடுகளின் உயர் மட்ட அதிகாரிகள் விரிவாக ஆராய தீர்மானித்துள்ளனர்.**

இரு நாடுகளிடையிலான உயர்மட்டத் தலைவர்களிடையிலான இச் சந்திப்பு இவ்வாரம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சர்ட்ஆர்மிரேஜ் தலைமையிலான உயர்மட்டக்குழு தற்போது டோக்கியோ சென்றுள்ளது. இங்கு ஆர்மிரேஜை சந்திக்கும் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்தும் தென்னிலங்கை அதிகாரப் போட்டியால் எழுந்துள்ள அரசியல் நெருக்கடி குறித்தும் ஆராய்வார்.

அத்துடன் எதிர்வரும் 17ஆம் திகதி வாஷிங்டனில் ஆர்மிரேஜ் தலைமையில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டின் மீளாய்வுக் கூட்டம் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கான அனுசரணையாளர்களான ஜப்பான்,அமெரிக்கா, நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு மேற்படி கூட்டத்தில் டோக்கியோவில் கடந்த வருடம் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கு பின்னர் இலங்கை நிலைமைகளையிட்டு மதிப்பீடு செய்யும் கூட்டமாகவே கருதப்படுகின்றது.

# கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் நடந்த குழு விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு கிழக்கு விளையாட்டுத் துறை அமைச்சினால் கரைச்சிப் பிரதேசசெயலர்பிரிவில் நடைபெற்றகுழு விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவிளையாட்டு அணிகளின் பெயர் விபரம் பின்வருமாறு.

பெண்களுக்கான எல்லே போட்டியில்.

1ம் இடத்தினை அம்பாள் குளம் இளம் தென்றல் அணியினரும், 2ம் இடத்தினை உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் அணியினரும் பெற்றுக் கொண்டனர்.

ஆண்கள் பிரிவு கபடிப் போட்டியில்.

1ம் இடத்தினை வட்டக்கச்சி ஜொனி விளையாட்டுக் கழகமும், 2ம் இடத்தினை யூனியன் குளம் வானதாரகை விளையாட்டுக் கழகமும், பெண்களுக்கான கபடிப்போட்டியில் 1ம் இடத்தினை உருத்திபுரம் உழவர்ஒன்றியம் அணியினரும் 2ம் இடத்தினை வட்டக்கச்சி இளந்தாரகை விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் 1ம் இடத்தினை அம்பாள் குளம் இளம் தென்றல் விளையாட்டுக் கழகமும் 2ம் இடத்தினை கிருஸ்ணபுரம் கிருஸ்ணபாரதி விளையாட்டுக்கழகமும், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் 1ம் இடத்தினை உருத்திரபுரம் உழவர்ஒன்றிய விளையாட்டுக்கழகமும் 2ம் இடத்தினை அம்பாள் குளம் இளம்தென்றல் விளையாட்டுக்கழகமும் பெற்றுக் கொண்டன.

வலைபந்தாட்டப் போட்டியில் 1ம் இடத்தினை வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக் கழகமும் 2ம் இடத்தினை ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக்கழகமும் பெற்றுக் கொண்டன.

எல்லே ஆண்களுக்கான போட்டியில் 1ம் இடத்தினை அம்பாள் குளம் இளந்தென்றல் விளையாட்டுக் கழகமும், 2ம் இடத்தினை வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகமும், கிரிக்கெட் போட்டியில் 1ம் இடத்தினை ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகமும், 2ம் இடத்தினை கனகபுரம் விளையாட்டுக்கழகமும் பெற்றுக் கொண்டன.

இப்போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக ஆ.சசிகரன், இ.சிவலிங்கம், க.புவனேந்திராஜா, ப.ஆனந்தராஜா, சி.ஜெயக்குமார், யோ.விஜயசிறி, பூ.சுபானந், பே.சிவநேசன், ஆ.அ.விக்கிரன்யான் ஆகியோர் கடமைபுரிந்தமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

## கௌரவிப்பு

கடந்த மாதம் 16ஆம் திகதி அன்று முல்லைப் பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தில் கடன் பெற்று பயன்பெற்று நல்ல முறையில் திருப்பிச்செலுத்திய பயனாளிகளுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. கௌரவிப்பில் பரிசில்களை முல்லை. மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர்தமிழ்நிலவு, முள்ளியவளைப் பிரதேசப் பொறுப்பாளர் ஆகியோர் வழங்கினார்கள். (20)

## பொருள் வழங்கலில் தாமதம் ஏன் ?

முல்லைத்தீவில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் குளம், வீதி என்பன திருத்தப்பட்ட போதும் அப் பணிகளில் ஈடுபட்டமக்களுக்கு பொருட்கள் இதுவரை வழங்கப்படவில்லை.2003ஆம் ஆண்டு காலப் பகுதியில் வேலைசெய்த மணற்குடியிருப்பு மக்களுக்கு அதற்கான பொருட்கள் இன்னமும் வழங்கப்படவில்லையெனமக்கள் மனவருத்தத்துடன் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (20)


## சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அனைத்து வாகனங்களுக்குமான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கலும், ஆவணங்களைத் தவறவிடப்பட்ட அனைத்துத்தர வாகனங்களையும் பதிவதற்கான நடமாடும் சேவை 21.02.2004, 22.02.2004 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது.

ஆதலினால் அவைகளுக்கான விண்ணப்பங்களை 09.02.2004ஆம்திகதி முதல் 16.02.2004ஆம் திகதிவரை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் உள்ள மோட்டார் வாகன போக்குவரத்துக் கிளையில் ஒப்படைக்குமாறு கிளிநொச்சி மாவட்டத்தினை நிரந்தரமாகக்கொண்ட விண்ணப்பதாரிகள் மட்டும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

(சி-8765)

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.



## புதுக்கடைத்திறப்பு விழா

### வேணில் நகைமாடம்

தருமபுரம் வேணில் நகைத்தொழிலகம் வேணில் அடைவு பிடிக்கும் நிலையத்திற்குஅருகாமையில் வேணில் நகைமாடம் 05.02.04 அன்று திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர், வாடிக்கையாளர் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு
உரிமையாளர்,
வி.கிருஸ்ணபிள்ளை.

(4207)



சிந்தனைக்கு

எனது மக்கள் பற்றியும், எனது தேசம் பற்றியும், எனது இயக்கம் பற்றியும் நான் பெருமிதம் கொள்கிறேன்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 04-02-2004

## நேற்றைய நண்பன்....!

"வெளிநாட்டு சக்திகளின் ஆக்கிரமிப்பைத் தடை செய்யவே எல்லாக்கட்சிகளும் ஒன்று சேர்ந்துள்ளோம்" என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன கூறியிருப்பது சிங்கள அரசியல்வாதிகள் தமது தேவைக்கேற்ப எதையும் பேசக் கூடியவர்கள் என்பதைத் தொடர்ந்தும் நிரூபிப்பதாகவே உள்ளது.

சிறிலங்கா அரசியல்வாதிகளைப் பொறுத்து அந்நிய சக்திகள் யார்? வெளிநாட்டு சக்திகள் யார்? என்பனவற்றுக்கு வரையறைகள் கிடையாது. ஏனெனில் சில வேளைகளில் சில அந்நிய நாடுகளைத் தமது நண்பர்களாகவும் உள்வீட்டுக்காரர்களாகவும் கருதுவதாக உள்ளது. சிலவேளைகளில் அந்நண்பர்களையே அந்நிய சக்திகளாகவும், ஆக்கிரமிப்பாளர்களாகவும் குற்றம் சாட்டுவதாகவும் உள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் வெளிநாட்டு சக்திகள் எனத் தற்பொழுது குறிப்பிடுவது அமெரிக்கா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளையே என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், இவர்கள் கடந்தமுறை ஆட்சியில் இருந்தபோது இவற்றையே தமது நட்பு சக்திகளாக ஆக்கிக்கொள்வதற்குப் பெரும் பிரயத்தனம் செய்து அவற்றில் காணப்பட்ட சிறு முன்னேற்றங்கள் தொடர்பாக பெரும் வெற்றியும் கொண்டாடியவர்கள்.

குறிப்பாக அமெரிக்காவும், பிரிட்டனும் விடுதலைப்புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் சேர்த்துக்கொண்டபோது பெரும் வரவேற்புக் கொடுத்தவர்கள் இத்தடைப் பட்டியலில் விடுதலைப் புலிகளை அந்நாடுகள் இணைத்துக் கொள்வதற்கென மிகப்பெரும் இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டவர்கள்.

மறுவளமாக தற்பொழுது கூட நோர்வே அரசை சமாதான முயற்சியில் ஈடுபடக்கோரியவர்கள் தாமே என சனாதிபதி சந்திரிகா தரப்பு பெருமை பேசிக்கொள்வதுமுண்டு. அவ்வாறானால், இவர்களின் நட்பு சக்தியும் ஆதரவாளர்களும் தற்பொழுது மட்டும் எவ்வாறு அந்நிய சக்தியாகவும் , வெளிநாட்டு சக்தியாகவும் மாறினர்.

தற்பொழுதுகூட சு.கட்சி–ஜே.வி.பி.கூட்டணியினர் இந்தியாவைத் தமது நட்பு சக்தியாக்கிக் கொள்வதற்காகப் பெரும் பிரயத்தனம் செய்கின்றனர். மிக அண்டை நாடு எனவும், பிராந்திய சக்தி எனவும், துதி பாடுவதோடு, இந்தியாவின் பாதுகாப்பு, இறைமைப்பாடு என்பன தொடர்பாகவும் மிகவும் கவலை கொண்டுள்ளனர். அதாவது கசிந்து கண்ணீர் மல்குகின்றனர்.

ஆனால், இவர்கள் தான் 1987 இல், சிறிலங்கா–இந்தியா சமாதான உடன்படிக்கை மூலம் இந்தியா இலங்கைக்கு அமைதிப் படை என்ற ரீதியில் இராணுவத்தை அனுப்பிய போது அதனை ஆக்கிரமிப்பு இராணுவம் எனக் கூறிக் கலவரத்தில் இறங்கியவர்கள். சிறிலங்கா–இந்தியா சமாதான உடன்பாட்டிற்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர்கள். உடன்பாட்டின்படி உருவாகிய மாகாணசபைத் தேர்தல்களைப் பகிஸ்கரித்தவர்கள்.

அதிலும் குறிப்பாக ஜே.வி.பி.யின் இந்தியாவிற்கு எதிரான நிலைப்பாடு நீண்டது. அதன் ஆரம்பகாலம் தொட்டே இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டையே கொண்டிருந்தது. ஜே.வி.பி.யின் ஸ்தாபகரும் தலைவருமான ரோகண விஜயவீராவின் புகழ்பெற்ற பிரச்சாரங்கள்கூட இந்திய எதிர்ப்புவாதத்தை அடிப்படையாகக் கொண்டவையே ஆகும்.

ஆனால், தனியாக சு.கட்சியும், ஜே.பி.வி.யும் மட்டும் தான் நண்பர்களை எதிரிகளாகவும், எதிரிகளை நண்பர்களாகவும் காலத்திற்குக் காலம் மாற்றிக்கொள்ளத்தக்கவை என்பதல்ல. ஐ.தே.கட்சியும் அதற்கு விதிவிலக்கானதல்ல. 1987 இல் இந்திய இராணுவத்தை வரவழைத்த ஐ.தே.கட்சி அரசாங்கம் இரண்டாண்டிற்குள் அதனை ஆக்கிரமிப்பு இராணுவம் எனவும், உடன் வெளியேற வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

சிங்கள அரசியல்வாதிகளின் இத்தகைய அரசியல் நிலைப்பாடுகளுக்கு அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை, நிரந்தர எதிரியும் இல்லையென்ற தத்துவம் விளக்கம் அளிக்க உதவக்கூடும். ஆனால், இத்தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு சிங்கள அரசியல்வாதிகளுடன் எந்நாட்டவராவது இராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்வார் களேயானால் அவர்களும் சிங்கள அரசியல்வாதிகள் போன்று நேரம் ஒன்று பேசுபவர்களாகவே இருக்க முடியும்.

ஆகையினால், சிங்கள அரசியல் தலைவர்களுடன் உறவை வலுப்படுத்த முனையும் வெளிநாட்டு சக்திகள் சிங்கள அரசியல் தலைவர்களை நம்பி அரசியல் நடாத்துவதைத் தவிர்த்துக்கொள்வது நல்லது. அவ்வாறு இல்லாது விடில் ஏமாற்றம், அவமானம் என்பன குறித்து அக்கறையோ, கவலையோ கொள்ளாது செயற்படுபவர்களாகவே அவை இருத்தல் வேண்டும்.

# நாட்டில் பாரியளவு பணப்புழக்க நெருக்கடி அடுத்துவரும் மாதங்களில் ஏற்படலாம்

## வர்த்தக சமூகம் எச்சரிக்கை

(கொழும்பு)

வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் வெளிநாட்டு உதவிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதால் அடுத்துவரும் மாதங்களில் நாட்டில் பாரியளவிலான பணப்புழக்க நெருக்கடி ஏற்படப்போவதாக எச்சரிக்கப்பட்டு இருக்கிறது.

பாரிய பணப்புழக்க நெருக்கடி ஏற்படுவதற்கான அறிகுறிகள் பல்வேறு பொருளாதார செயற்பாடுகளிலும் இப்பொழுதே தென்பட ஆரம்பித்துள்ளதாக வர்த்தக சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

பல்வேறு வர்த்தக அமைப்புக்கள் கடந்த சில தினங் களுக்கு முன்னர் இது தொடர்பில் பொது இணக்கப்பாட்டுக்கு வந்து சனாதிபதிக்கும் பிரதமரிற்கும் அழுத்தம் கொடுப்பதற்கான உபாயங்களை விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதன் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களால் பொருளாதார வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டதாக கூட்டு வர்த்தக சபை பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த ஓரிரு மாத காலப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் வெளிநாட்டு உதவிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால் - ஏப்ரல் மாதமளவில் பெரும் பணப்புழக்க நெருக்கடி எதிர்கொள்ளப்படுவதாக அமைப்பின் தலைவர் மகேந்திர அமரசூரிய தெரிவித்திருக்கிறார்.

# சுதந்திரக் கட்சி. ஜே.வி.பி. கூட்டணி மூன்று மாதங்களுக்குள் ஆட்சியமைக்கும்

## பொ.ஐ.மு.பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

இன்னும் மூன்று மாதங்களில் ஜே.வி.பி, சிறில.சு.க. கூட்டணி ஆட்சி அமைத்துவிடும் எனவும் அதில் அமைச்சரவை 35 உறுப்பினர்களை மட்டும் கொண்டிருக்கும் எனவும் பொ.ஐ.முன்னணியின் ஊடகப் பேச்சாளரான சரத் அமுனுகம கூறியுள்ளார்.

கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இக் கூட்டணியில் அங்கம்வகிக்கும் கட்சிகள் ஊழல் மோசடிகளிலீடுபடுவோருக்கு இடமளிக்காததால் வரும் தேர்தல் வேட்பாளர் நியமனங்களில் ஊழல் மோசடி செய்வோர் அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.முன்னணியரசில் தரகுப்பணம் பெறும் அமைச்சர்கள் இருக்கிறார்கள். 250 இலட்சம் தரகுப் பணம் பெற்ற அமைச்சர் மத்தியமாகாணத்தில் இருக்கிறார்கள். ஆயினும் அவர் உயிருடன் இல்லை. இந்த அரசாங்கம் பதவிக்கு வரும் போது சிறு துவிச்சக்கரவண்டி கூட இல்லாதிருந்தவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டு அவர் இப்போது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்தர மதுபான நிலையங்களை வைத்திருக்கிறார்.

போலி மருந்துகளை இறக்குமதி செய்து மோசடியில் பணம் சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்கு மரணதண்டனை வழங்கவேண்டும் என நான் பாராளுமன்றத்தில் கோருவேன். தரகுப்பணம் கொடுக்காத காரணத்தினால் மீன்களை தகரத்தில் அடைக்கும் தொழிற்சாலைக்கு அமைச்சர் இடமளிக்காததும் எமக்குத் தெரியும். இவ்வாறான மோசடிகள் இடம்பெற எமது கூட்டணி அரசில் இடமளிக்க மாட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மக்கள் தீர்ப்பை ஏற்கத் தயார்

## -அமைச்சர் மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

சனநாயக ரீதியில் நடாத்தப்படும் தேர்தலில் மக்கள் வழங்கும் எந்த ஒரு தீர்ப்பையும் ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராகவே உள்ளது என அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; அடுத்த தேர்தலில் கட்டாயமாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் பாராளுமன்றத்தினுள் பிரவேசிப்பார்கள். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அவர்களின் உதவிகளையும் நாடவேண்டி ஏற்படலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

# சனாதிபதிக்கு சமாதான முயற்சிகளை பொறுப்பேற்கும் எண்ணம் கிடையாது

## -ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் பின்கதவால் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள சனாதிபதி விரும்பவில்லை. சமாதான முயற்சியினை பொறுப்பேற்கும் எண்ணம் சனாதிபதிக்கு இல்லை- என்று சனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் கூறியுள்ளார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தினை அமுல்படுத்தும் விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் புலிகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். இது அரசியல் சம்பந்தப்பட்ட விடயமல்ல என்று செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தினை சனாதிப்தி கௌரவிக்கின்றார். பிரதமரே சமாதான முயற்சியினை முன்னெடுக்க வேண்டும் என்பதே சனாதிபதியின் நினைப்பாகும்.

விடுதலைப் புலிகளுடன் பின்கதவால் ரகசியமான முறையில் தொடர்பை ஏற்படுத்த சனாதிபதி விரும்பவில்லை. சமாதான முயற்சியை பொறுப்பேற்பது தொடர்பில் எத்தகைய தீர்மானத்தையும் சனாதிபதி எடுக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# 'லீக்' முடிவு இறுதிப் போட்டியைப் பாதிக்காது

## -இந்திய அணித் தலைவர் கூறுகிறார்

அவுஸ்திரேலிய அணிக்கு எதிராகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை பேர்த்தில் நடைபெற்ற லீக் போட்டியில் நாங்கள் தோல்வியைத் தழுவி இருந்தாலும் இந்தத் தோல்வியானது இறுதிப் போட்டியில் எங்கள் விளையாட்டை எந்த விதத்திலும் பாதிக்காது என இந்திய அணியின் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியிடம் ஐந்து விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இந்தியா தோல்வி அடைந்தது. இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இறுதிப் போட்டி என்பது வித்தியாசமான ஒன்றாகும். இறுதிப் போட்டி நடைபெறவுள்ள மெல்போர்ன், சிட்னி ஆகிய இரு மைதானங்களும் எங்களுடைய விளையாட்டுக்கு ஏற்ற மைதானங்களாகும். இறுதிப் போட்டியை எதிர்நோக்கி ஆவலுடன் இருக்கின்றோம்.

பேர்த் மைதானத்தில் ஆசிய கண்டத்தைச் சேர்ந்த எந்த ஒரு அணியும் விளையாடுவது என்பது கடினமான விடயமாகும். ஏனெனில், வேகப்பந்துவீச்சுக்கும், பௌன்சருக்கும் சாதகமான ஆடுகளமே பேர்த் மைதானத்தில் உள்ளது என்றும் தெரிவித்தார்.




# டெஸ்ட் போட்டிகளே மெக்ராத்தின் குறி!

சிறிலங்காவில் இம்மாதம் ஆரம்பமாகவுள்ள அவுஸ்திரேலிய- சிறிலங்கா அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டிகளில் கலந்துகொள்ளப் போவதில்லை என்றும் டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொள்வதற்கான தகுதியைப் பெறுவதிலேயே தான் கவனம் செலுத்தவுள்ளதாகவும் அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா டெஸ்ட் தொடருக்கு முன்னர், விளையாடுவதற்கான தகுதியைப் பெறுவதற்காக உள்ளூர் அணிகளுக்கிடையிலான நான்கு நாள் போட்டியில் கலந்துகொள்வதில் தான் மிகுந்த அக்கறையுடன் இருப்பதாகவும் கணுக்கால் சத்திரசிகிச்சையின் பின்னர் ஓய்வெடுத்து வரும் மெக்ராத் தெரிவித்துள்ளார். சிறிலங்காவில் டெஸ்ட் தொடர் அடுத்தமாதமே ஆரம்பமாகவுள்ளதால் தனது கணுக்கால் காயத்திலிருந்து பூரண குணமடைவதற்கு மெக்ராத்திற்கு போதிய அவகாசம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# மனோ-மலிக் சந்திப்பில் புதிய திட்டம் சமர்ப்பிப்பு!

(கொழும்பு)

சனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான அரசியல் முறுகல் தொடர்பாக மற்றுமோர் பேச்சுவார்த்தை நேற்று இடம்பெற்றது. பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட மலிக்-தித்தவெல குழுவைச் சேர்ந்த இரு தரப்பினரும் சனாதிபதிக்கும்- பிரதமருக்கும் இடையிலான அரசியல் முறுகல் நிலையை முடிவுக்குக் கொண்டுவரத் தனித்தனித் திட்டங்களை முன்வைததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சனாதிபதியின் ஆலோசகர் மனோதித்தவெல, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சார செயலாளர் மலிக் சமர விக்கிரம ஆகியோருக்கிடையிலான பேச்சுவார்த்தை அலரி மாளிகையில் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தைத் தொடர்பாக சனாதிபதியின் செயலாளர் கருணாரட்ண பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோர் கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அரசியல் முறுகலுக்கு தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இக் குழுவின் முன்னால் இரு தரப்பிலிருந்தும் நேற்று புதிய யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை விரைவில் சனாதிபதிக்கும், பிரதமருக்கும் சமர்ப்பிக்கப்படுமென அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் இது வரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் மீளாய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை, அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை எதிர்வரும் 09ஆம் திகதி நடைபெறவுள்ளதெனக் கூறப்பட்டுள்ளது. (32)

-வலி. வடக்கு உண்ணாவிரதத்திற்கு-

# ஒலிபெருக்கி பாவனைக்கு பொலிசார் அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கங்களின் சமாசத்தின் உண்ணா விரதத்தில் ஒலிபெருக்கிகளை பாவனை செய்ய பொலிசார் அனுமதி மறுத்துள்ளனர்.

இன்று வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் முன்பாக ஆரம்பிக்கப்படவுள்ள சாகும் வரையிலான உண்ணா விரதப்போராட்டத்தில் அறிவிப்புக்களை வழங்கும் பொருட்டு ஒலி பெருக்கிகளை பாவிக்க பொலிசார் இவ்வாறு அனுமதிமறுத்துள்ளனர்.

இதுதொடர்பாக வலிகாமம் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கங்களின் சமாசத்தலைவர் த.கணேஸ் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.(33)

# மக்கள் வழங்கிய ஆணைக்கிணங்க பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்

## சிறிலங்கா சுதந்திரதினச் செய்தியில் சந்திரிகா

மக்கள் வழங்கிய ஆணைப்படி தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தன்னுடைய சுதந்திர தின செய்தியில் கூறியுள்ளார்.

இந்நாட்டைப் பாதுகாக்க ஆயுதப் படையினர் செய்த தியாகங்களையும் இன்று நாங்கள் நினைவிற் கொள்வோம் என மேலும் அவர் கூறினார்.

எங்களுடைய சுதந்திர வரலாறு அதிகமாக இனப்பிரச்சினையால் அழிக்கப்பட்டுள்ளது. இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண நாங்கள் இப்போது அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முற்பட்டுள்ளோம். சமாதானத்தை ஏற்படுத்த அரசியல் சக்திகளும் சமூக சக்திகளும் ஒன்றுபடும் என நான் நம்புகிறேன் என சனாதிபதி கூறினார்.

# கிளிநொச்சி நகரில் நாளை சர்வதேசப்பாடசாலை திறப்புவிழா

(அலுவலகச்செய்தியாளர்)

சர்வதேச தரத்திற்கு ஏற்ப எமது தாயக மண்ணின் சிறார்களை வளர்த்தெடுக்கும் தூரநோக்குடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கிளிநொச்சியில் நிறுவியுள்ள சர்வதேசப் பாடசாலை நாளை மங்கலகரமாக ஆரம்பித்து வைக்கப்பெறவுள்ளது.

வருங்காலச் செல்வங்களான இன்றைய சிறார்களுக்கு அடிப்படையில் இருந்தே மண்ணின் சூழலிற்கும், காலத்திற்கும்,சர்வதேச தரத்திற்கும் ஏற்ப கல்வி புகட்டி ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கும் நல் நோக்குடன் நிறுவப்பட்டுள்ள இப்பாடசாலையில் இணைவதற்கு நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப் பெற்ற சிறார்களுக்கு உரிய சீருடைகளை இன்று காலைமுதல் தமிழர் புனர்வாழ்வுக்கழக முதன்மைச் செயலகத்தில் நேரில் சென்று பெற்றோர்களை பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (லோ)

# மிலேனியம் சிற்றி முற்றுகை விவகாரம் பாராளுமன்றக்குழு அமைப்பு

அத்துறுகிரிய மிலேனியம் சிற்றி முற்றுகை தொடர்பிலான சனாதிபதியின் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக ஆராயும் நோக்கில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்று நேற்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவுக்கு நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி தலைமை தாங்குகிறார். அத்துடன் அரசாங்கத் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான கருணாசேன கொடித்துவக்கு ராஜித சேனாரட்ண, ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம்.அஸ்வர்,லால் தர்மப்பிரிய ஹமகே, ரோகித பூகொல்லாகம, எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன் செனவிரட்ண, ரோகிதஅபே குணவர்த்தன, மகிந்தானந்த அலுத்ஹமகே, சுனில் ஹன்டுனெற்றி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மிலேனியம் சிற்றி முற்றுகை தொடர்பில் பிரதமர் உட்பட பலர் நாட்டுக்கு துரோகம் செய்தவர்களென சனாதிபதியின் ஆணைக்குழு இனம் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வறிக்கை தொடர்பாக ஆராய நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்ட வேளை ஜீ.எல்.பீரிஸ் இப்பிரேரணை தொடர்பாக நாடாளுமன்றத்தில் பிரேரணை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது. (32)

## நிறுவன தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்.இன்போமற்றிக் ஸ்ரடீஸ் நிறுவனத்தின்(ஐ.ஐ.எஸ்) எட்டாவது நிறுவன தினமும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை காலை 9.30 மணிக்கு சென்ஜோன்ஸ் கல்லூரியில் நிறுவன இயக்குநரின் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் கௌரவ விருந்தினர்களாக,

டேவிட்டொமினிக் (நிறைவேற்றுப் பணிப்பாளர்) பிரசாந்தா பெனாண்டோ (முகாமையாளர்) ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

-மக்கள் ஆதரவு எதிர்ப்பு-

# ஒவ்வொரு மாவட்ட நிலை குறித்து சனாதிபதி கருத்துக்கணிப்பு

ஒவ்வொரு மாவட்டத் திலுமுள்ள பிரதான அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் தொடர்பாக பெறப்பட்ட கருத்துக்கணிப்புக்கள் கடந்த 30 ஆம் திகதி சனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி சிறிலசு.கட்சியின் பின்னடைவும் முன்னேற்றமும் பற்றியும் ஐ.தே.க. பின்னடைவு பற்றியும் ஆழமாகப் பரிசீலிக்கப்பட்டுள்ளது.

தமது கட்சிக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ள மாவட்டங்கள் தொடர்பாக மிகுந்த கவனம் எடுக்குமாறு தொகுதியமைப்பாளர்களை சந்திரிகா உத்தரவிட்டுள்ளார். அத்துடன் வரப்போகும் தேர்தல் ஒன்றுக்கும் தயாராகுமாறும் அவர் கூறியுள்ளார். சுமார் 5 மணித்தியாலங்களாக நடைபெற்ற இச்சந்திப்பின் போது எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, தி.மு.ஜயரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மேலும் ஒருகருத்தமர்வு நாளை சனாதிபதி மாளிகையில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

# ஏ-9 வீதியை 24மணிநேரமும் திறக்க ம.உ.அமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஏ-9வீதியை பொதுமக்களின் பாவனைக்காக 24மணிநேரமும் திறந்துவிடுமாறு மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான அமைப்புகோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வீதி 24மணி நேரமும் திறந்துவிடப்படாமையால் பொதுமக்களின் இயல்பான போக்குவரவு உரிமை மீறப்படுவதுடன். படையினரின் சோதனைக் கெடுபிடிகள் மற்றும் விசாரணைகளிலும் உரிமைமீறல்கள் அதிகம் இடம்பெற்றுவருகிறது.

எனவே மக்களின் இயல்பான போக்குவரவு உரிமையை பேணும் விதத்தில் இப்பாதையில் உள்ள முகமாலை மற்றும் புளியங்குளம் ஆகிய சோதனைச்சாவடிகளைத் திறந்து விடுமாறு கோரும் இவ்வமைப்பு, சிறிலங்காப் படையினர் மற்றும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் பேசி ஆலோசித்து வருகிறது. இதேவேளை இவ்வீதியை 24 மணிநேரமும் திறப்பதற்கு புலிகள் ஏற்கனவே சம்மதித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (33)

# யாழ்.கூட்டுறவு அபிவிருத்திக்கு 125 மில்.ரூபா நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இயங்கிவரும் கூட்டுறவுச்சங்கங்களின் அபிவிருத்திப பணிகளுக்காக 125 மில்லியன் ரூபா நிதியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2004ம்ஆண்டு யாழ்.மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச்சங்கங்களின் உடனடித் தேவைகளை இனம் கண்டு நிவர்த்தி செய்வதற்காகவே இந்நிதி பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்தகால போர் நடவடிக்கைகளால் இவ்வாறான சங்கங்கள் பலவற்றிற்கு ஏற்பட்ட சேதங்கள். இழப்பீடுகள் என்பவற்றை நிவர்த்தி செய்யும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

# கோப்பாயில் ஜி.ரி.இசற் 50 வீடுகளை அமைத்தது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச வாழ் மக்களுக்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் (G.T.Z) 50 வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்துள்ளது. கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து பின் இப்பிரதேசத்தில் மீளக்குடியேறியோரை இனம்கண்டு இவ்வீட்டுத் திட்டத்தில் உதவி வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொன்றும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுதியுள்ள இவ் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டதன் மூலம் 250 இற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளர். இதேவேளை இந்நிறுவனம் சிறுப்பிட்டி மற்றும் அச்சுவேலியில் உள்ள வளலாய் ஆகிய பிரதேசங்களில் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் மேலும் 50 குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. (33)

# கசிப்பு ஏற்றிவந்த கார் மரத்துடன் மோதி தீப்பிடித்தது

## சாரதி கருகி மரணம்

கசிப்பு ஏற்றி வந்த கார் ஒன்று கண்டி - கொழும்பு பிரதான பாதையில் பிலிமத்தலாவ எனுமிடத்தில் பாதையைவிட்டு விலகி மரம் ஒன்றுடன் மோதி தீப்பற்றியதால் சாரதி அடையாளம் காணமுடியாதவாறு கருகி மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் நடந்துள்ளது. பெரும் தொகை கசிப்பு கொள்கலன்களை ஏற்றி வந்த கார் எதிரேவந்த டிரக்டர் வண்டியுடன் மோதியது. இதனால் கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதி தீப்பற்றியுள்ளது. காரில் பயணம் செய்த மற்றொருவர் பலத்த காயங்களுடன் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கிருஷாந்தி...

7 ஆம் திகதி யாழ். கைதடிப்பகுதியில் பாடசாலை மாணவியான கிருஷாந்தி குமாரசாமி படையினரால் படுகொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டமை தெரிந்ததே. இதன் பின்னர் அவரைத் தேடிச் சென்ற அவரது தாய்,சகோதரன், மற்றும் அயலவரும் படையினரால் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (32)

## மாகாண...

வர்த்தன ஆகியோரும் கலந்து கொண்டனர். தேர் தல் சனிக்கிழமை நடத்தப் படவுள்ளதை சகல உறுப்பினர்களும் வரவேற்று உரையாற்றியுள்ளனர். சகல தேர்தல்களும் ஒரே நாளில் நடைபெறவுள்ளமையால் பல பிரச்சினைகள் தவிர்க்கப்படுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## சிறிலங்காவின்....

நொச்சி மாவட்ட வெகுசன அமைப்புக்களின் வேண்டுகோளிற்கிணங்க இன்று பொது இடங்களிலும் பொதுமக்களின் வீடுகளிலும் கறுப்புப் பட்டிகள் அணிந்து ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது. (24)

## இன்றைய...

இராணுவக் காவலரண்கள் மற்றும் முகாம்கள் எங்கும் நேற்றுப்பிற்பகலே படையினரால் சிங்கக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அத்துடன் அப்பகுதியெங்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் என்றுமில்லாதவாறு பலப்படுத்தப்பட்டிருந்தது.

அத்துடன் கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த மீனவ சங்கங்களிற்கு நேற்று விஜயம் செய்துள்ள படையினர் இன்றைய தினம் ஏற்றுவதற்கெனக்கூறி கொடிகளையும் கையளித்துள்ளனர்.

இதேவேளை அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களிலும் இன்றையதினம் கொடியேற்றல் நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன், சுதந்திரதினக் கொண்டாட்டங்களும் அனுஷ்டிக்கப்படவேண்டுமெனவும் படையினர் நேரடியாக உத்தரவுகளைப் பிறப்பித்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (27),(33)

## மனிதாபிமானப்...

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு வருட காலமாகியும் மக்களின் மனிதாபிமானத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை குறித்தும் இதனால் மக்கள் சந்தித்து வரும் நெருக்கடிகள் குறித்தும் எடுத்துக் கூறினார். சிறிலங்காவின் சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் அரசியல் நெருக்கடி நீடித்துச் செல்வது குறித்து விளக்கிய அவர், இந்நெருக்கடி தீரும் வரை உடனடிமனிதாபிமான உதவிகள் கிடைப்பதை தாமதப்படுத்த முடியாது எனத் தெரிவித்ததுடன் சர்வதேச சமூகம் இம் மனிதாபிமானப் பிரச்சினையைத் தற்காலிகமாகவேனும் தீர்ப்பதில் அர்த்தமுள்ள ஈடுபாட்டை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

மக்களின் துன்பங்களைப் போக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பது குறித்து தேவையான முயற்சிகளை மேற்கொள்வதாக சுவிஸ்சர்லாந்து வெளிவிவகார அமைச்சுக்குழு உறுதியளித்தது.

## வீதி...

வேளையில் அங்குவந்திறங்கிய சிலகடற்படைச்சிப்பாய்கள் நாடகத்தை கண்டு களித்துக்கொண்டிருந்தவர்களை விரட்டியடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் கலைஞர்களுடனும் முரண்பாட்டை உருவாக்கிக்கொண்டு வாக்குவாதங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மக்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து அங்கு சென்ற பேச்சுவார்த்தை நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் படையினரையும்,மக்களையும் சந்தித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (2

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.